# நமது பிள்ளைகளை ஆரோக்கியமாகவும் பாடசாலைகளை நோயற்ற இடமாகவும் வைத்திருப்போம்.



## பாடசாலை நோய்த்தடுப்பு செய்வதற்கான அட்டவணை

**ஒன்டாரியோவில் உங்கள் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்றால் பின்வரும் தொற்று நோய்களுக்கான நோய்த்தடுப்பை அவர்கள் பெற்றிருக்க வேண்டும்:**

- ☑ **மூளைக் காய்ச்சல்** (மெனிஞ்சோகோகல் நோய்)
- ☑ **கக்குவான் இருமல்** (வூப்பிங் இருமல்)
- ☑ **கொப்பளிப்பான்** (சிக்கன்பொக்ஸ்) *(2010 அல்லது அதற்குப் பிறகு பிறந்த பிள்ளைகளுக்கு)*
- ☑ **டிஃப்தீரியா**
- ☑ **டெட்டனஸ்**
- ☑ **போலியோ**
- ☑ **தட்டம்மை** (மீசிள்ஸ்)
- ☑ **கூவைக்கட்டு** (மம்ப்ஸ்)
- ☑ **ரூபெல்லா**

**பரிந்துரைக்கப்படும் வேறு வக்சீன்களுக்கு, ontario.ca/vaccines இல் ஒன்டாரியோ நோய்த்தடுப்பு பெறுதல் அட்டவணைக்குச் செல்லுங்கள்.**

## ஒன்டாரியோவின் நோய்த்தடுப்பு பெறுதலுக்கான (இம்யுனைசேஷன்) அட்டவணையை தவறாமல் பின்பற்றுங்கள்

பெற்றோர்களாக உங்கள் பிள்ளைகளை பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பது உங்கள் முதலாவது பொறுப்பாகும். ஒன்டாரியோவின் நோய்த்தடுப்பு அட்டவணையின்படி 4 முதல் 17 வயது வரையிலான பாடசாலைக்குச் செல்லும் அனைத்து பிள்ளைகளுக்கும் நோய்த்தடுப்பு மருந்து கொடுக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் எளிதில் பரவக்கூடிய பல கடுமையான நோய்களிலிருந்து பிள்ளைகளை நோய்த்தடுப்பு பெறுதல் பாதுகாக்கிறது.

*பாடசாலை மாணவர்களுக்கான நோய்த்தடுப்புச் சட்டத்தின்* கீழ், பிள்ளைகள் டிஃப்தீரியா, டெட்டனஸ், போலியோ, தட்டம்மை (மீசிள்ஸ்), கூவைக்கட்டு (மம்ப்ஸ்), ரூபெல்லா, மூளைக்காய்ச்சல் நோய், கக்குவான் இருமல் மற்றும் – 2010 அல்லது அதற்கு பின்பு பிறந்த பிள்ளைகளுக்கு – கொப்பளிப்பான் நோய்க்கு எதிரான நோய்த்தடுப்பு பெற்றதற்கான ஆதாரம் இருக்க வேண்டும். தகுந்த காரணம் இருந்தால் விலக்கு உண்டு. முழுமையாக நோய்த்தடுப்பு பெற்றுக்கொள்ளாத பிள்ளைகள் பாடசாலைக்கு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## நீங்கள் என்ன செய்யவேண்டும்

உங்கள் பிள்ளை பள்ளிக்குச் செல்வதற்குத் தேவையான அனைத்து வக்சீன்களையும் (நோய்த்தடுப்பு மருந்து) பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்த உடல்நல பராமரிப்பு வழங்குபவரை அல்லது உள்ளூர் பொதுசன உடல்நலப் பிரிவைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். உங்கள் பிள்ளை நோய்த்தடுப்பு அட்டவணையின்படி அனைத்து வக்சீன்களையும் பெற்றிருந்தால், மேலதிக வக்சீன்கள் தேவைப்படாது.

உங்கள் பிள்ளையின் புதுப்பிக்கப்பட்ட நோய்த்தடுப்பு பெற்ற பதிவுகளை உள்ளூர் பொதுசன உடல்நலப் பிரிவிற்கு தெரிவிப்பது உங்களுடைய பொறுப்பு என்பது உங்களுக்குத் தெரியுமா? உடல்நலப் பராமரிப்பு வழங்குபவர் உங்களுக்காக இந்தப் பதிவுகளைப் சமர்ப்பிக்க மாட்டார். உங்கள் உள்ளூர் பொதுசன உடல்நலப் பிரிவைக் கண்டறிய அல்லது நோய்த்தடுப்பு பெறுதல் பற்றிய மேலதிக தகவலுக்கு, ontario.ca/vaccines ஐப் பாருங்கள்.

## நாம் அனைவரும்தான் நம் ஒவொருவரையும் பாதுகாக்க வேண்டும்.

**உங்கள் பிள்ளைகளுக்கு வக்சீன் கொடுக்கும்போது, ஆபத்தான நோய்களில் இருந்து அவர்களையும் அவர்களைச் சுற்றியுள்ள மற்றப் பிள்ளைகளையும் நீங்கள் பாதுகாக்கிறீர்கள்.**

Ontario

# உலகம் முழுவதும், 200 வருடங்களுக்கும் அதிகமாக வக்சீன்கள் உயிர்காத்து வருகின்றன!

## வக்சீன்களைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக பின்வரும் நோய்களில் இருந்து உங்கள் குடும்பத்தை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**கக்குவான் இருமல்** (பெற்ரூசிஸ் அல்லது வூப்பிங் இருமல்)
கக்குவான் இருமல் என்பது பிள்ளைகள், இளம் பருவத்தினர் மற்றும் பெரியவர்களுக்கு நீண்ட இருமலை ஏற்படுத்துகிற ஒரு தொற்று நோயாகும். கக்குவான் இருமல் குழந்தைகளில் தீவிரமாக இருக்கலாம். இந்த இருமல் பிள்ளைகளை வாந்தி எடுக்கச் செய்யலாம் அல்லது சிறிது நேரம் மூச்சு விடுவதை நிறுத்தலாம். இது குழந்தைகளில் நிமோனியா, அத்துடன் மூளை பாதிப்பு மற்றும் வலிப்பு போன்ற கடுமையான சிக்கல்களையும் ஏற்படுத்தலாம்.

**கொப்பளிப்பான்** (வரிசெல்லா அல்லது சிக்கன்பொக்ஸ்)
கொப்பளிப்பான் என்பது, சோர்வு, லேசான தலைவலி, 39 டிகிரி செல்சியஸ் வரை காய்ச்சல், உடல் குளிர்தல் மற்றும் தசை அல்லது மூட்டு வலிகளை ஏற்படுத்தும் ஒரு தொற்று நோயாகும். இதற்கு, ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன் சிவப்பு, அரிப்பு, கொப்புளம் போன்ற சொறி ஏற்படலாம். கொப்பளிப்பானிலிருந்து வரும் சிக்கல்கள் கடுமையானவை மற்றும் பாக்டீரியா தோல் தொற்று, காது தொற்று மற்றும் நிமோனியா ஆகியவற்றை இது உள்ளடக்கும்.

**மூளைக்காய்ச்சல் நோய்** (மெனிஞ்சோகோக்கல் நோய்)
மெனிஞ்சோகோக்கல் தொற்று நோய்கள் மூளைக்காய்ச்சல் (மெனிஞ்சைட்டிஸ்) உட்பட கடுமையான நோய்களை ஏற்படுத்தும். மூளைக்காய்ச்சல் என்பது மிகவும் கடுமையான தொற்று நோயாகும். இது நோய்க்கிருமியைக் “காவித்” திரியும் ஆரோக்கியமான ஒரு நபருடன் அல்லது நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நபருடன் தொடர்பு கொண்டவர்களில் ஏற்படுகிறது. மெனிஞ்சோகோக்கல் நோய் இரத்தம் விஷமடைதலை ஏற்படுத்துவதோடு மூளை மற்றும் முதுகுத் தண்டில் நோய்தொற்றுகளையும் ஏற்படுத்தும்.

**டெட்டனஸ்**
டெட்டனஸ் அல்லது தாடை இறுக்கம் என்பது ஒரு கடுமையான நோயாகும். டெட்டனஸ் கிருமிகள் தோலில் ஏற்படும் காயங்கள் மூலம் உடலுக்குள் செல்கின்றன. இது தசைப்பிடிப்பு மற்றும் ஆபத்தான வலிப்புகளை ஏற்படுத்தும்.

**டிஃப்தீரியா**
இது மூக்கு, தொண்டை மற்றும் தோலில் ஏற்படும் ஒரு கடுமையான நோயாகும். இது தொண்டை வலி, காய்ச்சல் மற்றும் உடலில் குளிரை ஏற்படுத்தும். சுவாசிப்பதில் சிரமம், இதய செயலிழப்பு மற்றும் நரம்பு சேதம் ஆகியவற்றால் டிஃப்தீரியா நோய் சிக்கல் அடையலாம்.

**போலியோ**
இது போலியோ வைரஸைக் கொண்ட தண்ணீரைக் குடிப்பதால் அல்லது உணவை உண்பதால் மக்களுக்கு பரவும் ஒரு கடுமையான நோயாகும். இது ஒரு மனிதரில் இருந்து இன்னொரு மனிதருக்கும் தொற்றலாம். போலியோ நரம்பு சேதத்தை ஏற்படுத்தும், ஒருவரை வாழ்நாள் முழுவதும் முடமாக்கிவிடும் மற்றும் மரணத்தையும் ஏற்படுத்தும்.

**கூவைக்கட்டு** (மம்ப்ஸ்)
கூவைக்கட்டு என்பது வைரஸால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும். மேலும் இது காய்ச்சல், தலைவலி மற்றும் கன்னம், தாடை மற்றும் கழுத்து வீக்கம் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகிறது. இது காது கேளாமை மற்றும் மூளை வீக்கம் போன்ற சிக்கல்களை ஏற்படுத்தும்.

**தட்டம்மை** (மீசிள்ஸ்)
தட்டம்மை என்பது மிக சுலபமாக பரவக்கூடிய வைரஸ் தொற்றாகும். இது அதிக காய்ச்சல், இருமல், சொறி, மூக்கு ஒழுகுதல் மற்றும் கண் சிவப்பை ஏற்படுத்தும். தட்டம்மை காது தொற்று மற்றும் நிமோனியா போன்ற சிக்கல்களை ஏற்படுத்தும்.

**ரூபெல்லா**
ரூபெல்லா என்பது வைரஸால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும். ரூபெல்லா காய்ச்சல், சொறி, தலைவலி, லேசான மூக்கு ஒழுகுதல் மற்றும் சிவப்பு கண்கள் (கான்ஜன்க்டிவிடிஸ்) ஆகியவற்றை ஏற்படுத்தலாம். இது கர்ப்பிணிப் பெண்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் கடுமையான சிக்கல்களையும், பெரியவர்களுக்கு மூட்டு வாதத்தையும் ஏற்படுத்தும்.

## முக்கிய குறிப்புகள்:

**உள்ளூர் பொது உடல்நலப் பிரிவின் கோப்பில் புதுப்பித்த நோய்த்தடுப்பு செய்த பதிவுகள் இல்லாத மாணவர்கள், பதிவுகள் வழங்கப்படும் வரை பாடசாலையிலிருந்து இடைநீக்கம் செய்யப்படலாம்.**

**உங்கள் பிள்ளைக்கு நோய்த்தடுப்பு விலக்கு தேவைப்பட்டால், உங்கள் உள்ளூர் பொது உடல்நலப் பிரிவில் பேசவும். மருத்துவம் அல்லாத காரணங்களுக்காகத் தேவையான நோய்த்தடுப்பு செய்வதிலிருந்து தங்கள் பிள்ளைக்கு விலக்கு அளிக்க விரும்பும் பெற்றோர்கள் கல்வி வகுப்பிற்கு செல்லவேண்டும். நோய்த்தடுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட குழந்தைகள் அதிக ஆபத்தில் உள்ளனர் மற்றும் தீவிர நோய்ப் பரவல் ஏற்படும்போது பாடசாலையிலிருந்து நீக்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.**

**Tamil.** Publication No. (301252) ISBN No. 978-1-4868-6734-9, PDF. March 2023. © King's Printer for Ontario, 2023.

உங்கள் பிள்ளைகளின் நோய்த்தடுப்பு பதிவுகளை தெரிவிப்பதற்கு உள்ளூர் பொதுசன உடல்நலப் பிரிவை தொடர்பு கொள்ளுங்கள்.

Ontario